ORIGINAL ARTICLE

# தமிழ்மொழி இலக்கணச் சிறப்புகள் ஓர் ஆய்வு [TAMIḺMOḺI ILAKKAṆAC CIṞAPPUKAḶ ŌR ĀYVU]

## NUANCES OF GRAMMAR IN TAMIL LANGUAGE

**லேகாதேவி பாலகிருஷ்ணன் / Lekhaadevi Balakrishnan *[1]**

[1] Pioneer Primary School, Ministry of Education, Singapore.
Email: lekhaadevi_balakrishnan@moe.edu.sg

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/161

**Abstract**

There is no book that states the grammatical attribute of tamizh literature more elegantly than Tolkāppiyam. Tolkāppiyam is one of the oldest Tamil literature which was written in the third century by Tolkāppiyar. Tolkāppiyar divided Tolkāppiyam into three chapters: letters (Eḻuttu), word (Col), and meaning (Poruḷ). The first chapter is letters (Eḻuttu). The noun (Eḻuttu) is made out of the verb (ezhu). Even though the word ezhu can come with various meanings, in this case it indicates something that has taken shape. Tolkāppiyar has divided the grammar of letters into two different types: The First (Muthal) and The Dependant (Charpu). The First type letters can be divided into two more types which are vowels (Uyir) and consonants (Mei). The vowels (Uyir eḻuttu) also can be divided into two types called (kuril) which produce short sounds and (nedil) which produce long sounds. The consonants have their own types, which are (Valliṉam), (Melliṉam) and (Iṭaiyiṉam). Valliṉam letters produce hard sound while melliṉam consonants produce soft sound and iṭaiyiṉam consonants produce medium sound. Moving on from the The First letters type, The Dependant type letters can be divided in three types: (Kuṟṟiyalukaram), (Kuṟṟiyalikaram), (Āyutam). Besides Tolkāppiyar, Agathiyar also have described the grammar of tamizh literature very precisely. Agathiyam which written by Agathiyar describes grammatical features of letters (Eḻuttu), word (Col), meaning (Poruḷ), consecration (Yaappu), team (Ani).

**Keywords**: Tolkāppiyam, letter, word, meaning

**ஆய்வுச் சாரம்**

தமிழ்மொழி இலக்கணச் சிறப்புகளை மிக அழகாகக் குறிப்பதற்கு, தொல்காப்பியம் இன்றி வேறில்லை. தொல்காப்பியம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மிகப் பழமையான தமிழ் இலக்கண நூலாகும். இது மூன்று முக்கிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவை, எழுத்து, சொல் மற்றும் பொருள். தொல்காப்பியர் முதல் அதிகாரத்தில் எழுத்து என்று குறிப்பிட்டுள்ளார். எழு என்ற வினையடியிலிருந்து பிறந்தது, எழுத்து என்னும் பெயர்சொல்லாகும். எழு என்பது

பல பொருள்களைக் கொண்டிருந்தாலும் வடிவம் பெற்ற ஒன்றினைக் குறிக்கிறது எனப் பொதுவாகக் கூறலாம். தொல்காப்பியர் எழுத்துகளின் இலக்கணத்தை முதல் மற்றும் சார்பு என்று இரு வகையாகப் பிரித்துள்ளார். முதல் எழுத்தை உயிர் மற்றும் மெய் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். மேலும், உயிர் எழுத்துகளைக் குறில் மற்று நெடில் என்றும் மெய் எழுத்துகளை வல்லினம், மெல்லினம் மற்றும் இடையினம் என்றும் பிரிக்கலாம். அதோடு, சார்பெழுத்தைக் குற்றியலுகரம், குற்றியலிகரம் மற்றும் ஆயுதம் என்று பிரிக்கலாம். அகத்தியரும் இலக்கணச் சிறப்புகளை மிகத் துள்ளிதமாகக் கூறியுள்ளார். அகத்தியர் இயற்றிய அகத்தியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தனுக்கும் இலக்கணம் கூறுகிறது.


**கருச்சொற்கள் :** தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 30th July 2021, revised 25th August 2021, accepted 10th September 2021


**முன்னுரை**

மொழி என்பது மனித வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்றாகும். இலக்கணம் இல்லாத மொழியில்லை எனலாம். இலக்கணம் மொழியின் கண் எனவும் கூறப்படுகிறது (சுப்புரெட்டியார், 2000)[1]. இலக்கண அறிவு சரியான வாக்கியத்தை அமைக்க உதவுவதோடு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகிறது. மாணவர்களும் மொழியை முறையாகக் கற்க இலக்கணம் உதவுகிறது (மோகனதாஸ், 2005)[2]. இலக்கியத்தைச் செம்மைப்படுத்தவும் மொழி திரிபு இடையாமலும் அதன் மரபு கெடாமல் எழுதவும் கற்கவும் துணைப் புரிவது இலக்கணமாகும் (பரமசிவம், 2010)[3]. தமிழ் இலக்கண வரலாற்றை எழுத தொடங்குவோர், இன்று தொல்காப்பியத்திலிருந்தே தொடங்குகின்றனர். அதன் காலம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதால், தமிழ் இலக்கண வரலாறு இரண்டாயிரம் ஆண்டுக்காலப் பரப்பை உடையது (அமுதன், 2006)[4]. தொல்காப்பியம் இலக்கிய வடிவிலிருக்கும் ஓர் இலக்கண நூலாகும். இந்நூலை எழுதியவர் தொல்காப்பியர் என்று தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுகிறது. இந்த தொல்காப்பியம் மூன்று முக்கிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவை எழுத்து, சொல் மற்றும் பொருள் ஆகும்.




*படம்* 1. தொல்காப்பியத்தில் இலக்கணப் பிரிவுகள்

**எழுத்து**





*படம் 2.* தொல்காப்பியத்தின் முதல் அதிகாரமான எழுத்தின் பிரிவுகள்

தொல்காப்பியர் முதல் அதிகாரத்தில் எழுத்து என்று குறிப்பிட்டுள்ளார். எழு என்ற வினையடியிலிருந்து இறந்தது எழுத்து என்னும் பெயர்சொல்லாகும். எழு என்பது பல பொருள்களைக் கொண்டிருந்தாலும் வடிவம் பெற்ற ஒன்றினைக் குறிக்கிறது எனப் பொதுவாகக் கூறலாம். தொல்காப்பியர் எழுத்துகளின் இலக்கணத்தை முதல் மற்றும் சார்பு என்று இரு வகையாகப் பிரித்துள்ளார். முதல் எழுத்தை மீண்டும் இரு வகையாகப் பிரிக்கலாம். அவை உயிர் மற்றும் மெய் ஆகும். உயிரை குறில் மற்றும் நெடில் என்றும் மெய்யை வல்லினம், மெல்லினம் மற்றும் இடையினம் என்றும் பிரித்துள்ளார் தொல்காப்பியர். தொடர்ந்து, சார்பெழுத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை குற்றியலுகரம்,

குற்றியலிகரம் மற்றும் ஆயிதம். குறு என்னும் அடியிலிருந்து பிறந்தது குறுக்கம். குறுக்கம் என்பது குறிப்பிட்ட எழுத்துகள் தம்முடைய ஓசையிலிருந்து குறுகியொலிப்பது என்று பொருள்படும். தமிழ்மொழியில் சில உயிரெழுத்துகளும் ஒற்றெழுத்துகளும் தம் ஓசையிலிருந்து குறிப்பிட்ட இடங்களில் வரும்போது குறைந்தொலிக்கின்றன.

**சொல்**




*படம்* 3 தொல்காப்பியத்தின் இரண்டாம் அதிகாரமான சொல்லின் பிரிவுகள்

பொருள்தரக்கூடிய மிகச்சிறிய ஒலிக்கூறு உருபன் என்று மொழியியல் கூறும். இவ்வுருபன் என்பதை ஏறக்குறைய சொல் என்பதோடு ஒப்பிடலாம். தனித்த நிலையில் பொருள் தரக்கூடிய உருபனைத் தனியுருபு (free morph), என்றும் கூறுவர். தொல்காப்பியர் கூறும் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தனியுருபுகளாகவும், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவை கட்டுருபுகளாகவும் அமையத்தக்கவை. சொல் என்னும்போது அது பொருள் தரும் ஓர் அலகு என்பதை உணரலாம் (திலகவதி, 2003)[5].


சொல்லின் வேராக அமைவது அடிச்சொல். பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். செயலைக் குறிப்பது வினைச்சொல். அடிச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும், பெயர்ச் சொல்லுக்கும் தனிப்பட்ட அளவில் பொருள் உண்டு. இடையும் உரியும் தனித்து நின்று பொருள் தராது. பெயர்ச்சொல்லையோ, வினைச்சொல்லையோ சார்ந்துதான் இடைச்சொல் அமையும் (tamilvu, 2001)[6]. தனித்து நின்று பொருள் தராது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் நின்று பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் எனப்படும். இடைச்சொல் பல வகைகள் படும். அவற்றுள் சில பின்வருமாறு.

1. வேற்றுமை உருபுகள்
2. பன்மை விகுதிகள் :கள், மார்.
3. திணை, பால் விகுதிகள்
4. கால இடைநிலைகள்.
5. சுட்டெழுத்துகள்.
6. உம்

உம் இடைச்சொல், ஒரு வாக்கியத்தில் பெயருக்கு அடையாக அடையாக வரும் சொற்கள், முற்றுவினைகள் தவிர்த்த பிறசொற்களுடன் இணைந்து வந்து வெவ்வேறு பொருளைத் தருகின்றது. இது வாக்கியத்தில் இணைப்பைச் சொல்லாகவும் பயன்படுகின்றது (நு மான், 1999)[7].

உரிச்சொல் பெரும்பாலும் பேச்சு வழக்கில் பயின்று வராத சொற்களாகும். உரிச்சொல், பெயர்சொற்களோடும் வினைச்சொற்களோடும் சேர்ந்து அவற்றின் பண்பை உணர்த்த வரும். உரிச்சொல் பொதுவாக செய்யுளுக்கு உரிய சொல்லாக வரும்.

**பொருள்**




*படம்* 4 தொல்காப்பியத்தின் முன்றாம் அதிகாரமான பொருளின் பிரிவுகள்

பொருள் என்பது ஒழுக்கமுறை ஆகும். மக்கள் வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றிக் கூறுவது பொருள் இலக்கணமாகும். இதை அகப்பொருள் மற்றும் புறப்பொருள் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். அகப்பொருள் அன்புடைய தலைவன் தலைவியைப் பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது. அகப்பொருளை மூன்றாகப் பிரிக்கலாம். அவை முதல் பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள். முதல் பொருளில் முதலாவதாக நிலம் அதாவது ஐந்து வகை நிலங்கள் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, முருதத்திணை, நெய்தல் திணை மற்றும் பாலைத்திணை ஆகும். மற்றொன்று பொழுது அதாவது பெரும் பொழுது ஆறு வகை, சிறு பொழுது ஆறு வகை. புறப்பொருள் என்பது வீரம், போர், தூது, வெற்றி, கொடை, நிலையாமை முதலியவற்றைக் கூறுவதாகும் (சிவலிங்கனார், 1988)[8]. ஒரு குறிப்பிட்ட அரசனையோ வள்ளலையோ குறுநில மன்னனையோ பெயரைச் சுட்டி அவனுடைய வீரம், வெற்றி, கொடை முதலியவற்றைக் குறிப்பது புறப்பொருளின் மரபாகும்.

**முடிவு**

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய மிகப் பழமையான இலக்கணமாகும். தொல்காப்பியரின் காலத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. தொல்காப்பியர் கூறியது போன்று

இலக்கணம் என்பது எழுத்து, சொல் மற்றும் பொருள் ஆகிய மூன்று தொகுப்புகளை உள்ளடக்கியது. ஒரு எழுத்தின் ஓசையின் பொறுப்பிலிருந்து ஒரு மனிதனின் வாழ்க்கைமுறை பற்றிய மிக நுணுக்கமான விளக்கங்களைக் கூறியுள்ளன.

**மேற்கோள் நூல்கள்:**

1. Suppu Reddiyar, N. (2000). *Tamiḻ payiṟṟu muṟai* [*Tamil Teaching Technique*]. Chennai: Steadfast Press.
2. Mohanadass. (2005). *Aṭippaṭai tamiḻ ilakkaṇam [Basic Tamil Grammar*]. Kuala Lumpur: University of Malaya.
3. Paramasivam, S. (2010). *Naṟṟamiḻ ilakkaṇam*. Chennai: Pattu Pathipagam.
4. Amuthan, T. (2006). *Aṭippaṭai Tamiḻ Payitru Murai* [*Basic Tamil Teaching Technique*]. Chennai: Steadfast Press.
5. Thilagavathy, Pon. (2003). *Tolkāppiya collatikārattil collum poruḷum [Meaning in Tholkappiya Lexicon*]. Puthucheri: Tamil Research Department.
6. Tamil Virtual Academy. (2001). *Tolkāppiyattil col atikāram [‘Word’ in Tolkappiyam*]. Retrieved from http://www.tamilvu.org/
7. Nuhman, M. A. (1999). *Aṭippaṭai tamiḻ ilakkaṇam* [*Basic Tamil Grammar*]. Sri Lanka: Reader’s Association.
8. Sivalinganar, A. (1988). *Tolkapiyam Uraivalam Sollathikaram* [*Text in Tolkappiyam*] Madras: International Institute of Tamil Studies.